# ஒரு பிடி சாம்பல்

ந. பாக்கியநாதன்



# ஒரு பிடி சாம்பல்

ந.பாக்கியநாதன்

நிகி வெளியீடு

# ஒரு பிடி சாம்பல்
ந.பாக்கியநாதன்

ஆசிரியர்
ந.பாக்கியநாதன்
அறிவாலயம்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை

பதிப்புரிமை
ரமா பாக்கியநாதன்

வடிவமைப்பு
தானா விஷ்ணு

வெளியீடு
நிகி
ஆனந்தகானம்,
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி,
இலங்கை.

முதற்பதிப்பு
ஒக்டோபர்,2016

அச்சாக்கம்
ஆகாயம் பதிப்பகம்,
இமையாணன்.

விலை: 200 /=

ISBN 978-955-3982-00-1

**Oru pidi saampal**
N.Pakkiyanathan

மறைந்தும்
என்னுள் மௌனமான
நினைவுகளாக வாழும் தந்தைக்கு.........

**நடேசன் பாக்கியநாதன் (1977)**

இவர் ஓர் ஆசிரியர். அண்மைக்காலங்களாக கவிதை மீது ஈடுபாடு கொண்டு தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். "ஒரு பிடி சாம்பல்" இவரது முதலாவது தொகுப்பாக இருக்கின்றபோதும் பல இலக்கியப் பெருவிழாக்களில் கவிதைக்கான மற்றும் சிறுகதைக்கான பரிசில்களையும் பெற்றுள்ளார். தற்போது இவர் கல்வியில் முதுகலைமாணி பட்டத்திற்கான பாடநெறியினைத் தொடர்ந்து வருகின்றார்.

மனைவி : பா.ரமா
பிள்ளைகள் : பா. ஆர்வலன், பா.அக்ஷயன்.
முகவரி : இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி,
யாழ்ப்பாணம்.
0770517938
arvalan31@gmail.com

# என் உள்ளத்திலிருந்து சில வரிகள்

கவிஞர்கள் காலம் காலமாக ஒரு மொழியின் சொந்தக்காரர்கள் அதாவது நிலத்தினை பயிர் செய்யும் விவசாயி போல ஒவ்வொரு சமூகத்திலும் மொழியை அவர்கள் உடமையாக வைத்திருப்பதால் அந்த மொழியை பாவிக்கும் சமூகம் அவர்களை நம்பி காலம் காலமாக இருக்கிறது. மற்றவர்கள் அவர்களிடம் கடன் வாங்கி மொழியைப் பாவிக்கிறார்கள். ஏன் தெரியுமா சமூகத்தின் கதையை ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது கவிஞர்களே தான் அந்த வகையில் எனது இக் கவிதைகளும் அமைகின்றன.

கடந்த இரண்டு தசாப்த காலமாக எனக்குள் மொழி நடையில் ஆர்பரித்துக் கொண்டிருந்த உருவமைப்பு வெளிப்பாடுகளை கவிதை வடிவில் வெளிகொணர்வதில் மகிழ்வடைகின்றேன். எந்தவொரு கலைஞனும் தானாக உருவாகுவதில்லை தனது வாழ்கைப் பயணத்தில் ஏற்பட்ட ஆழமான பதிவுகளின் வெளிப்பாடுகள், அனுபவங்கள், என்பவற்றின் நெருடல்களின் ஆர்ப்பரிப்புக்களை பிறருக்கு வெளிப்படுத்துவதற்கான உத்தியாக இக் கவிதைகள் அமைகின்றன.

அந்த வகையில் என்னுள் ஆழமாக பதிந்த பதிவுகளின் வெளிப்பாடுகளே இக் கவிதைகள் நீண்டகாலமாக எனக்குள் கவிதை எழுதி வாழ்ந்து விட்டேன். இவற்றுள் பெரும்பாலான கவிதைகள் என் நிஜய வாழ்க்கையின் நிதர்சனங்களாகவே அமைகின்றன.

ஒரு காலப்பகுதியில் வாசிப்பதனால் மனிதன் முழுமைய டைந்தான் ஆனால் இப்போது வாசிப்பு என்பது அருகிக் கொண்டே வருவதனை காண முடிகின்றது. இந்த வகையில் ஒரு மனிதன் தான் வாழும் சமூகத்திற்கு என்ன செய்தான் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. ஆதலால் இச் சமூகத்தில் என்னை அடையாளப்படுத்துவதற்கான ஆவணமாக இவ் கவிதைத் தொகுதி அமைகின்றது.

என்றும் அன்புடன்
**ந.பாக்கியநாதன்**

# அப்பட்டமாய் கருத்துச் சொல்லும்

## பாக்கியநாதனின் ஆக்கங்கள்

கவிதைப் படைப்பாக்கம் கனதிமிக்க தேடலாலும் தொடர்ச்சியான பயில்வினாலும் நிகழ்கின்ற ஒரு முயற்சியாகும். எந்தவொரு காலத்திலும் கவிதை ஒரு "சூட்சுமத்தைத்" தன்னுள் பொதிந்து வைத்தே தன் இருப்பை நிலை நாட்டி வந்தது. ஓர் ஆரம்ப நிலைப் படைப்பாளி கவிதைக்கான இலக்கணங்கள், வெளிப்பாட்டு உத்திகள், வடிவங்கள், என்பன பற்றி நன்கு அறிந்திருந்தாலும் அதன் சூட்சுமத்தை நன்கு விளங்கிக் கொள்ளும் போது தான் ஆழமான அர்த்த புஸ்டியான கவிதைகளைப் படைக்க முடிகின்றது. கவிதையின் பொருள், அதற்கான வெளிப்பாட்டு உத்திகள், அதனை வெளிப்படுத்தும் மொழி அவற்றின் வழி சாத்தியமாகும். கவிதை தரும் உணர்வுகள் என்பவை இயைந்த ஒரு வாசக அனுபவத்தினை அல்லது பரவச நிலையினைத் தருவதே கவிதைப் படைப்பாக்கத்தின் வெற்றியாகும்.

கவிதைப் படைப்பாக்கத்தின் சிறப்பான கூறுகளை இரசிக்கின்ற அல்லது நயக்கின்ற ஒரு வாசகன் இரண்டு வழிகளில் அதனைச் செய்கின்றான். ஒன்று ஒன்றித்த வாசிப்பு. மற்றது மகிழ்தரும் கேட்டல். ஒன்றித்த வாசிப்பு என்பது கண்களும் உளமும் அறிவுத்திரளும் இணைந்த செயன்முறை. மகிழ்வு தரும் கேட்டல் என்பது காதுகளும் உளமும் உணர்வுத் திரளும் இணைந்த செயன்முறையாகின்றது.

இவை இரண்டையும் வேறுபடுத்தும் காரணிகளாக கவிதையின் வெளிப்பேறான உணர்வும் அறிவும் அமைந்து விடுவதன் விளைவுதான் கவிதை பற்றிய புரிதல் மற்றும் நயத்தலிலான வேறுபாடு ஏற்படக் காரணமாகின்றது. இது தவிர்த்துவிட முடியாததும் கூட.உணர்வு நிலையைத் தூண்டிவிடும் கவிதைகளில் நிகழ்த்துகைக்காக எழுதப்படும் கவிதைகள் முதன்மையானவை. நூல் வடிவில் வெளிவரும் கவிதைகளிலும் நிகழ்த்துகைக்கான தன்மைகளுடன் வெளிவரும் கவிதைகள் உள்ளன. ஒரு தொடக்க நிலைக் கவிஞனிடம் இந்த நிகழ்துகைக்கான கவிதைகளின் தாக்கம் உள்ள அதே நேரத்தில் "வானம்பாடிக் கவிஞர்களின்" தாக்கமும் தவிர்க்க முடியாத பண்புக் கூறுகளாக இருப்பதை அவதானிக்கலாம். அத்துடன் வெள்ளையாய் கவிதை சொல்லல் அல்லது அப்பட்டமாய் கவிதை சொல்லல் முறை ஒன்று மிகுந்திருப்பதைக் காணலாம்.

பாக்கியநாதனின் படைப்புக்களில் மேற்கூறிய பண்புகள் உள்ளன. அவை அப்பட்டமான தன்மையுடன் வெளிவருகின்றன. வெளிப்படையாகத் தன் அனுபவங்களைச் சமர்ப்பிக்கும் பண்புடையவையாகின்றன. உறவின் பரிவுகள், உறவின் தியாகங்கள், போரின் கொடுந்தடங்கள், ஒழுக்க வாழ்வின் உன்னதங்கள், காதல் உணர்வுகள், நட்பின் வசீகரங்கள், குழந்தைகளின் ஏக்கங்கள், கல்வியின் சிறப்பு, ஆசிரியத்தின் மேன்மை என்று பல்வேறு விடயங்களை முன்வைக்கிறார்.

பாக்கியநாதன் தன் உயர்தர வகுப்பு மாணவப் பருவத்திலேயே கவிதைத் துறையில் ஆர்வம் மிக்கவராயிருந்தார். தற்போது சிற்றிதழ்களில் கவிதை எழுத அறிமுகமாயிருக்கும் இவர் "ஆருதி" "அக்ஸி" போன்ற புனை பெயர்களில் உள்ளூர் பத்திரிகைகளில் கவிதை எழுதிவருகின்றார். ஆசிரியத் தொழில் புரியும் இவர் 15 வருடகால சேவையைத் தாண்டிப் பணிபுரிபவர். இன்று தகவல்

தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்துடன் தன்னை அடையாளப்படுத்தியுள்ள இவர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வளவாளராகத் திகழ்கின்றார். கம்பர்மலை வித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளின் ஆசிரியராக இணைந்து பணியாற்றும் இவர் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியராகவும் கலைப்பட்டதாரியாகவும் விளங்குகின்றார். கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா வரலாற்றில் முதுகலைமாணி படிப்புக்களை நிறைவு செய்துள்ளார்.

அண்மைக்காலங்களில் சிவதீபம், கலாவதி, ஞானதீபம் போன்ற மலர்களில் கல்வியியல் கட்டுரைகளையும், ஜீவநதி, கலைமுகம், நானிலம் வலம்புரி போன்ற மலர்களில் கவிதைகளையும் எழுதி வருகின்றார். அரச ஆக்கத்திறன் போட்டிகளில் பங்கேற்று பிரதேச மட்டத்தில் பரிசில்கள் பெற்றுள்ளார்.

பாக்கியநாதனிடத்தில் சீர்திருத்த நோக்குகள் அமைந்துள்ளன
"ஏழைகளின் வயிறு" என்ற இவரின் ஆக்கத்தில்
அங்கே ஒட்டிப் போன
வயிறுகள் ஒப்பாரி
வைக்கின்றன.
ஒரு நேரக் கஞ்சி கேட்டு
பாலபிசேகம் செய்தால்
புண்ணியம் சேரும்
திண்ணிய மனசுகள்
பாலூற்றிப் போகின்றன
கடவுளின் காலடிக்கு....

என்ற வரிகள் சமூகத்தின் பகுத்தறிவில்லாத செயல்களைக் காட்டுகின்றன. வல்லாராய் வாழ என்ற கவிதை தரும்

சந்தக்கட்டுக்கள் இன்புறத்தக்கனவாக அமைந்துள்ளன. உறங்கும் பிணங்கள் காட்டும் மனிதப் பேரவலம் நெஞ்சில் உதிரம் கொட்டச் செய்கிறது. இவ்வாறு சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் இவர் எதிர்காலத்தில் தன் கவிதைகளை மேலும் ஆழமும் நுட்பமும், அழகும் மிக்கதாக வளர்த்து வளம் பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**இ.இராஜேஸ்கண்ணன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
சமூகவியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம

# வாழ்த்துரை

**யோகசாமி ரவீந்திரன்**
பிரதிக்கல்விப்பணிப்பார்
வலயக்கல்வி அலுவலகம்
வடமராட்சி.

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டம்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

கவி மழை சிந்தும் திரு.ந.பாக்கியநாதன் இவர்களினது "ஒரு பிடி சாம்பல்" கவிதைத் தொகுதிக்கு வாழ்த்துரை வழங்குவதில் அக மகிழ்கின்றேன். இயற்கையின் எழிலை, செல்லச் சிணுங்கல்களை, வாழ்வியல் தடங்களை தனது எளிய சொல்லாடலின் மூலமாக எம் மனவானில் உலாவ வழிசமைத் துள்ளார். இவ் படைப்பாளி.

மரணங்கள் மலிந்த பூமியில் வாழ்ந்தனால் தான் என்னவோ, கவிதைக் களத்தின் பல இடங்களில் அவற்றின் தடங்களைப் பிம்பங்களாக உலாவ விட்டுள்ளார் நூலாசிரியர்.

"வலிகளடர்ந்த வேதனையோடு

விழிகளடர்ந்த வழியே.."

என்ற வரிகளில் கவிஞரின் ஒரு சாம்பலிற்கான குறிகாட்டி தெளிவுபடுத்தப்படுகின்றது. கவிக்களத்துடன் ஒன்றித்துப் பயணிக்கின்ற சொல்லாடல் கவிஞரின் கவித்துவத்திற்கு கட்டியம் கூறுகின்றது.

ஆசிரியரென்போர் அட்சய பாத்திரங்களாய் தமது பல்பரிமாண நுண்மதித் திறன்களினூடாக எம் மாணவர்களது ஆளுமைத் திறன்களை வளர்ப்பவர்கள் இந் நிலைப்பாட்டில் ஒரு தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளதோ என்று என்னுள் ஒரு ஏக்கம் இது வெறும் பிரமை என்பதை இப்படைப்பாளி எடுத்தியம்பியுள்ளார். இப்படைப்பினூடாக பன்மைத்துவ ஆற்றல் கொண்ட இளம் ஆசிரியர் குழாமொன்று முகிழ்வதைக் காண என் மனம் குதூகலிக்கின்றது.

பல்வேறு நெருக்கீடுகளுக்கு மத்தியில் வாழும் எமக்கு அவற்றிலிருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு மீண்டிட அழகியல் உணர்வுகள் வழிசமைக்கின்றன. இப் பணியினை தனது எளிய நடைமூலம் சிறப்பாக நிறைவேற்றிய வகையில் நூலாசிரியரின் முயற்சிக்கும் எனது பாராட்டுக்கள்.

கோளமயமாக்கலின் நன்மைகளுக்கடையே நாம் இழந்த முதுசங்கள் ஏராளம் அவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடியது எமது வாசிப்புப் பழக்கமாகும். இது இன்று படைப்பிலக்கியங் களிலிருந்து நூலுருவாக்கத்திற்கு குந்தகமானதோர் சூழலை ஏற்படுத்தியுள்ளது. இக் கவிதைத் தொகுப்பின் வெளியீட்டில் முனைப்புடன் செயற்படும் நூலாசிரியரின் முயற்சியானது ஏனைய படைப்பிலக்கியங்களுக்கான உந்துதலாக அமையும் என்றே நான் கருதுகின்றேன்.

பல்துறை ஆற்றல் மிகுந்த கவிதாசிரியரிடமிருந்து தமிழ் கூறும் நல்லுலகு நிறைய வெளியீடுகளை எதிர் பார்க்கிறது. அதற்கான ஆற்றல், விவேகமும், உழைப்பும், இவரிடம் ஏராளம் உண்டு. அவர் தம் படைப்பிலக்கியப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

"சொல்லுந் திறன் தமிழ்மொழிக்குண்டு
செயற்றிறன் நமக்குண்டு
பரிணமிப்போம் புதிதாய்
படைத்திடுவோம் தீஞ்சுவைக் காவியங்கள் பல"

உள்ளே.....


01. பிரிவு
02. முதிர் கன்னிகள்
03. மடலின் வருகைக்காக
04. சிறகொடிந்த பறவை
05. மரணம்
06. நினைவுகள்
07. வல்லவராய் வாழ
08.கலங்கரை விளக்கு
09. கலையாத கல்வி
10. தகவல் தொடர்பாடல்
11. அப்பா சுடர் விடும் விளக்கு
12. ஏக்கம்
13. ஆட்டம்
14. இன்றைய வாழ்வு
15. நிலவு
16. விடிவினை நோக்கி
17. புதுவசந்தம்
18. வெளிநாடு
19. மழைத்துளி
20. தற்கொலை
21. பார்வையின் பதிவு
22. விண்மீன்கள்
23. விளை நிலமே
24. ஆசான்
25. மரணவாசல்
26. அன்னை
27. தொலைந்துபோன காலங்கள்
28. பயணம்

29. பட்டமரம்
30. ஏழைகளின் வயிறு
31. இதயத்துச் சூரியன்
32. வலிகளின் புலம்பல்
33. சோலைப் பூக்கள்
34. மின்சாரப் பெட்டி
35. நினைந்தும் நினையாமல்
36. உறங்கும் பிணங்கள்
37. கருவறை
38. பொய் முகங்கள்
39. உயிர் குருவி
40. வளமான வாழ்வு
41. நிழலாடும் நினைவுகள்
42. நிழல் வாழ்வின் நியங்கள்
43. உயிரற்ற உறவுகள்

## பிரிவு

ஒரு கொடியில் மலர்ந்து
உரிமையோடு உறவாடிய
உயிர்ப் பூக்கள் - இன்று
பிரிவுகளால்
தனிப் பூக்களாக
தவிக்கின்றன
தனிப் பூவாக தவிக்கும் - இந்த
உயிர்ப் பூவோடு
உறவாட பல உறவுகள்
இருந்தும் - இன்று
மௌனமாகவே ....
பேசி மௌனிக்கின்றன.

## முதிர் கன்னிகள்

மார்கழி மாதத்து
வைகறை மேகங்கள்
இதமான தென்றல்
காற்றுக்கு கையசைத்துப் போக
அலை பாடும் இசையோசையின்
உயிர் மூச்சில் மலர்ந்த
நுரைப் பூக்கள் - தினமும்
கரையேற முடியாமல்
முதிர் கன்னிகள் போல
தவிக்கின்றன.

## மடலின் வருகைக்காக

உன் மடலின்
எதிர்பார்ப்பு எனக்கு
உன் வருகை போன்றது
அதில் உள்ள
எழுத்துக்கள்
உன் புன்னகை தவழும்
முகத்தினை பிரகாசிப்பன

உன்முகம் பார்க்க ஆசை
அதனால் மடலின் எதிர்பார்ப்பு
கரைகின்ற
ஒவ்வொரு நொடியும்
நீண்டதாய் தெரிகின்றன
ஒவ்வொரு நாட்களும்
ஒவ்வொரு யுகங்கள் போல
என் இமைகளை மூடாது
காத்திருக்கின்றேன்.
உன் மடலின் வருகைக்காக.......

## சிறகொடிந்த பறவை

நட்பு பரீட்சையல்ல அது
வெற்றி தோல்விக்காக
உணர்வில் கலந்த பாசஊற்று
எனக்காக பல உறவுகள்
இருந்திட்ட போதும்
இறுதி வரையில்
என்னோடு வருவது
உன் நட்பு ஒன்றே
வாழ்கையின் தொடக்கத்திற்கு
முடிவுரை எழுத நினைத்தேன்
முடியவில்லை
வெற்றி வானம் தொட்டு
ஒருவரி எழுத நினைத்தேன்
எதிர் பார்த்த எதுவும்
என் வாழ்வில்
நடக்கவில்லை
உன் புன்னகை என்

காயப்பட்ட இதயத்திற்கு
ஆத்ம திருப்தி
சோதனைகளும் வேதனைகளும்
என்னைத் தேடி வந்த போதும்
சுமை தாங்கியாய்
சுமப்பவள் நீயே
நீ மட்டும் தான்
என் நினைவோடு கலந்து
உயிரோடு உறைந்த
விலை மதிக்க முடியாத சொத்து

என் விதி தான் இப்படி
உன் விதி என்றாலும் என்னை
வாழவைக்கும்
அந்த நம்பிக்கையில் உன்
உறவை உன்னதமானதாக
நினைக்கின்றேன்

நெஞ்சில் வஞ்சம் இல்லா
சிறகொடிந்த பறவை நான்
வாழ் நாள் முழுவதும்
உன் சிறகின் துணையால்
வாழ்கையெனும் வானத்தில்
பறக்க விரும்புகின்றேன்....

## மரணம்

உயிரின் உயிரே
நினைவின் வலியே
உன்னை நினைத்தால்
என் விழிகளின்
இமையோரம் உதிரம்
வழியுதே..

பாடையிலே நீ
போகையிலே
பாவி இவன்
பாதி உயிர்
உன்னோடு வந்ததே
நீ போகும் இடம்
எதுவென்று தெரியாமலா
பூமிக்குள் புதையுண்டு
போனாய்

உன் நினைவுகள்
தந்த வலிகள்
என் விழிகளில்
உதிரமாய் கரைகின்றது
உன் நினைவு
என்னுள் வாழும் வரை.

## நினைவுகள்

வார்த்தைகளை வானவில்லாக்கி
உன் இதயத்தின் வாசலில்
தினமும் வலம்
வருகின்றேன்....

சுமக்க முடியாத
வலியோடு
உன் நினைவுகளை
சுமக்கின்றேன்

என் கனத்த இதயத்தில்
கவலைகள்
கண்ணீராய் வரவில்லை
உள்ளுக்குள் உறைந்து விட்டது
என் கண்ணீரை
உன்னெதிரே உறைய
வைப்பதற்காய்

எனக்குள் இருந்த
உன் உருவத்தை
அறிமுகப்படுத்திய
தேவதையே.
என் இதயத்தில் ஒட்டியிருப்பது
உன் பெயரன்றோ
உன் சின்னச் சின்ன
நினைவுகளைச் செதுக்க
அன்பு எனும் அந்தச் சிற்றுளி

உன்னை நினைத்தால் - என்
உள்ளம் அழுகிறது
உன்னிடம் சொல்வதற்கு
என்னிடம் வெறும்
வார்த்தைகளைத் தானே
வைத்திருக்கின்றேன்.

உன்னைச் சுற்றி
என் நினைவுகள்
வருவதனால்
இந்த வார்த்தைகளும்
சொந்தம் உனக்கே.

## வல்லாராய் வாழ

கல்வி யெனுமாழ் கடலதில் மூழ்கின்
நல்கிடு மறிவு பெரிதோர் முத்தென
பல்கிப் பெருகி பாரினிற் செழிப்புற
வல்லமை பெற்று வாழ்ந்திடு !

கற்றலுக் கிங்கு கனிவான நிலையுண்டு
ஆற்றல் பெருக்கிட ஆனபல வழியுண்டு
மாற்றம் பெற்று மறுமலர்ச்சி கண்டு
ஏற்றம் பெற்றிட ஏது நிலையுமுண்டு.

இலவசக் கல்வியும் சீருடையுமிங்குண்டு
இனிதான மொழியில் கல்வியுமுண்டு
பலகலைகள் கற்க பல்கலைக்கழகமென
பாரினிற் கற்றுயர் பலவழிகளுண்டு.

கற்றலுக்கிங்கு பல வழிகள் காத்திருக்க
கற்காமல் காலமதை வீணடிக்கலாமோ
எதிர்காலம் நல்லதொரு வளமானதாக்க
வளருகின்ற நீ கல்விதனை நிறுத்தலாமோ

இளவயதில் தொலைக்காட்சி இனிமைதரும்
இழிவான செயலேயதில் நிலையாகும்
அழிவுதரு தொடரதிலே மனமாளும்
ஆழ்ந்திட்டால் வாழ்க்கையது பாழாகும்

நல்லது மெல்லவே வளருமென்று
நல்லறிஞர் சொல்லி வைத்த உண்மையிது
புல்லரது செயல் கண்டு துவளாதே
புன்னகை கொண்டு நீ கற்றிடுவாய்.

தெருவோரம் நீ சுற்றித் திரிவதனால்
செருப்புத் தேய்வதுமே வீணென்றுகாண்
கருவான கல்வியே காண் பாரிய செல்வமென
கருத்தினைத் தலைமேற் கடமையெனக்கொள்.

வறுமையதை நினைத்து உளமது வருந்தாதே
பொறுமைதனை இழந்து உடலது துடிக்காதே
நிலைமையெது விங்கு வந்திட்ட போதும் -கல்வி
நிலையான தென்பதை நீ மறக்காதே.

கல்வி கரையில் கற்பவர் நாள் சில எனப்பல
நல்கி உரைத்த நாலடியார் போல்
சொல்லியுணர்த்திய திருக்குறளும் பலவும்
தொல்லுலகிலுண்டு கல் வல்லாராய் வாழ.

## கலங்கரை விளக்கு

அது
வயலும் வயல் சார்ந்த
வல்லைவெளி அதனை
மேவியொரு வல்லவெளி
பலகுடிகள்

சங்கிலி மன்னனின்
தானைத் தளபதி
இமையாணன் அவன்
ஆண்ட மண் அது
அந்த மண்ணுக்கும்
அவன் பெயரே
எழில் கொஞ்ச
பனம் பொழில் விஞ்ச
அதனிடையோர் பாடசாலை
அதுவும்

இமையாணன் அ.த.க.பா
கல்விக்கு கலங்கரை விளக்கு
பலர் வாழ்விற்கு அது வசந்தம்
கலையாத கல்வி
நிலையான ஒழுக்கம்
வானுயர நிற்குது
வளம் பல கண்ட
சோதனைகள் ஆயிரம்
சாதனைகள் பல
சாதனையாளர்களும் பலர்
இன்று வரை அது தொடருது
இத் தரணி வியந்து கொண்டது

## கலையாத கல்வி

தேடி வரும் தென்றல்
விலகி போக
நாடி வந்த நட்புக்கள்
நாளடைவில் பிரிந்து போக
வாழ்க்கையில் தேடிப் பெற்ற
கலையாத கல்வியே
வளமான வாழ்வுக்கு
வாழ்த்துப் பாடும்.

சந்தோசவானில்
ஸ்ப்த ஸ்வரங்கள்
இதமான தென்றல் காற்றுக்கு
மெட்டமைக்க
வாழ்க்கைப் பூஞ்சோலையில்
வசந்தமெனும் மழை தூவ
சிந்திக்கும் இதயத்திலே
வீணைராகம் இசைக்க
புன்னகை தவழும் இதழ்களில்
மத்தளம் கவி பாட
கலையாத கல்வியிலே
மல்லிகை கவரி வீச
பேசுகின்ற வார்த்தைகளிலே
சொல்லெல்லாம் வாழ்த்துக் கூற
இனிதான எதிர் கால வாழ்வுக்கு
கல்வியே நிகழ்காலம்.

## தகவல் தொடர்பாடல்

பூகோள மயமாக்கலில்
தகவல் தொடர்பாடல்
உயர் துறை
வேலை வாய்ப்பில்
தாக்கம் அளப்பரியது
காற்றுப் புகாத
இடத்திலும் நுழையும்
ஆற்றலும் இணையான
கண்டு பிடிப்புக்களும்
தாராளம் கொண்டது
எங்கிருந்தாலும் எவரும்
எதிரில் நிற்பது போல
உலகம் உள்ளங் கைக்குள்
சுருங்கி எம்மை
நவயுகத்திற்கு மாற்றம்
பெற செய்கின்றன.

## அப்பா சுடர் விடும் விளக்கு

உழைப்பால் உயர்ந்த
உன்னத தந்தையே
மெழுகாக உனையுருக்கி
கல்விச் சிகரத்தில் எமை
ஏற்ற ஏணியாய் நின்ற
சுமை தாங்கியே
மண்ணிலே எம் புகழ்
எப்போதும் உயர்ந்திட
அல்லும் பகலுமாய்
வெய்யிலும் மழையிலுமாய்
எந்நாளும் உழைத்த
மேதையல்லவா நீ
தன்னைப் போலன்றி எமை
சான்றோனாக்க
செய்த தியாகங்கள்
இன்றும் நியமாக எம் வாழ்வின்
வரலாற்றின் வழிகாட்டியாக

நினைவில் நிற்கின்றன
ஒருபொழுதேனும்
எம் முகம் காணாது
ஏதேன்று ஓடோடி வந்திடுவாய்

ஓய்வு என்ற சொல்லுக்கு
வாழ்வில் இடமேயில்லை
துணிவே துணை என்ற
தாரக மந்திரத்தை
நித்தம் மனதில் நிறுத்தி
வாழ்வில் உயர்ந்த
சுடர் விடும் விளக்கே.

நித்திய வாழ்வில்
உறைந்து போன
உன் ஒவ்வொரு துளி
வியர்வையும்
எமக்காக அவை
நிழல் தந்த விருட்சங்கள்

கால நதியில்
கனவுகள் கலையலாம் - ஆனால்
உன் மீது கொண்ட
அன்பு என்றும்
கலையாது நினைவுகளாக
நிலையாக எம் வாழ்வில்
நிலைத்திருக்கும்.

## ஏக்கம்

புலர்ந்தும் புலராத
பொழுதினிலே
தூக்கம் கலையாத
விழிகளோடு
துயில் எழுந்து
பதறி பதை பதைத்து
ஆகாரம் தேடி வைத்து
கைக் குழந்தையின்
முகமலர்ச்சியின்றி
வேலைக்காக பஸ்சைப் பிடிக்க
ஓடும் தாய் !
பிறசர் ஏறி இறங்கும்
அம்மம்மாவின் அரவணைப்பில்
மழலையோ திண்டாட்டம்
அம்மா என துயில்
எழும்பும் குழந்தை
அம்மாவின் முகம் தேடி
அழுகின்ற மனது.
புட்டிப் பாலைக் கொடுத்து
புனை கதைகள் பல சொல்லி
அழுகையை மறக்க வைக்கும்
உத்திகள் எத்தனை எத்தனை
அத்தனையும் தோல்விகள்

வீட்டுவளவிற்குள்
இரண்டு கிலோமீற்றர்
நடைபயின்று
உணவு ஊட்டும் நிலை
எத்தனை... வீடுகளில் !

பிள்ளைக்குமேல் காயுது
பதறிக் கொண்டு
மகளுக்கு தொலைபேசி
அழைப்பு வா
இங்க விடமாட்டினம்
இன்ன மருந்து கொடு
என்ற பதில்.
அதிகாலையில் போன தாய்
மாலையில் வீடுவரும் போது
அம்மாவாறா...
என ஓர் அறிமுகம் செய்யும்
அம்மம்மாக்கள் தான்
எத்தனை எத்தனை ?
அன்னை அரவணைப்பிற்காக
ஏங்கித் தவிக்கும் பிள்ளைகளின்
உள்ளக் குமுறல்களை
எழுத்தில் வடிக்க இயலாது
இந்த நிலை என்று மாறுமோ
அதுவரையும்
இந் நிலைதான் தொடரும்
தொடரட்டும்.

## ஆட்டம்

ஆடும் வரை ஆட்டம்
எல்லாமே ஆட்டம்
இரவு நேர ஆட்டம்
இறுதி வரை ஆட்டம்
மின்னொளியில் ஆட்டம்
மின்னலாய் ஆட்டம்
பதினொரு பேர் ஆட்டம்
பார்க்க முடியாஆட்டம்
வீறு கொண்ட ஆட்டம் - வீரர்
கோல் அடிக்க திண்டாட்டம்
ரசிகர்களோ கூத்தாட்டம்
இறுதியில் அடிதடி ஆட்டம்
அன்றை ஆட்டம்
எப்படியோ முடியும்
முடிந்த பின் மீண்டும்......

## இன்றைய வாழ்வு

வாழ்க்கை வாழ்க்கை
வாழ்க்கையடா
எதுவரை வாழ்கை
வாழ அழைக்கிறதோ
அதுவரையும்
வாழ வேண்டுமடா
காசே வாழ்க்கையென
வாழும் மனித கூட்டம் இன்று
நீயா நானாவென
போட்டி போடும்
இதொரு கூட்டம்.

வாழ்க்கையில் நீ
உயர்ந்தால் உலகம்
உன்னைச் சுற்றுமடா
வாழ்க்கையில் நீ
விழுந்தால் உலகை நீ

சுற்றுவாயடா விழுகின்றவனை
விழ வைப்பதும்
விழுகின்றவனை எழாமல்
தடுப்பது தான்
இன்றைய மனித வாழ்வு

மனிதம் மறைந்து
பல காலமடா இன்று
ஈனச் செயல்கள் நிறைந்த காலமடா
வாழும் வரை வாழு உன் காலம்
வரும் போது வெல்லு.......

## நிலவு

வெண்ணிலவே
உன் நினைவால்
என் நினைவு மலர்ந்திடும்
இதயம் குளிர்ந்திடும்
தரணியிலே நீ
தனி நிலவாய்
எங்கோ தொலை தூரத்தில்
உலா வரும் உனக்கு
ஒரு முறை இருட்டுக்குள்
வாழ்வு வரும் - மீள
வளர்ந்து எழுந்து
முழுதாய் மலர்ந்து
நினைவாய் மலர்ந்திடுவாய்
என் நினைவில்.....

## விடிவினை நோக்கி

சின்னச் சின்ன ஆசைகள்
நெஞ்சில் வந்து போகுதே
நினைவு அறியா நாளிலிருந்து

பள்ளி செல்லும்
பருவத்திலே வசதியின்றி
பிஞ்சு உள்ளம் விம்மி அழுதது
கள்ளமில்லா வெள்ளை உள்ளங்களின்
வாழ்வு கருகியது

துள்ளித் திரியும் வயதினிலே
சிறகொடிந்த பறவையானோம்
அன்னை தந்தை இருந்தும்
அன்பு கொள்ள யாருமின்றி
ஆதரிப்பார் யாருமின்றி
அனாதையானோம்

போகும் இடம்
எதுவென்று தெரியாது
வலிகளடர்ந்த வேதனையோடு
விழிகளடர்ந்த வழியே
போகின்றோம்
விடிவினை நோக்கி....

## புதுவசந்தம்

அலைபாடும் இசையோசை
கேட்கலையா
கடலில் நாம் தேடும்
துயர் பார்க்கலையா
இருள் சூழ்ந்த
எம் வாழ்வில் ஒளி வீசலையா
ஆழியலையில்
தொலைந்த வாழ்வின்
தடயங்கள் மறையலையா

படகோடு திசை மாறிப் போன
உறவுகளின் உயிர்
வலி புரியலையா
விழிமூட மறுக்கின்ற
விடிகாலை வரை
உப்புக் காற்றின் உயிர் மூச்சில்
துடிப்போடு உயிர்
வாழும் உருவங்களைத்
தெரியலையா

வெள்ளி நிலா வெளிச்சத்தில்
உயிர் தேடிப் போன உறவுகள்
உதிர்ந்த உயிர் துளிகள்
நாதியற்று கலங்குவதை உணரலையா
கதிரோனின் வரவால்
கரைசேரும் வாழ்வில்
புது வசந்தம் வீசலையா

## வெளிநாடு

முகவரி தெரியாத நகரிலே
புரியாத பாஷையிலே
அறிமுகமில்லா பொய்முகங்கள்
உயிரையே உறைய வைக்கும்
பனித்துளிகள்
வசதியாகயிருக்கிறது
தேடித் தந்த வாழ்க்கை

பொறுப்பாய் என்னை
அனுப்பி விட்டு
நிம்மதியாக இருக்கிறீர்
எம் கடமை முடிந்து விட்டதென்று.

சொந்தமில்லை பந்தமில்லை
கரம் பற்றியவனோ
வேலை வேலை நிம்மதியில்லை
மனநோயாளியாய் மௌன மொழி
பேசி மௌனிக்கிறேன்.

ஒரு நாள் பொழுது
யுகங்களாகத்தான் கழிகின்றன.
காத்திருந்தேன்
கைபிடித்தவன் வருவான்...

காத்திருப்பிற்கு
அர்த்தமில்லா ஏமாற்றந்தான்

விழி மூடும் வரை
ஏக்கப் பெருமூச்சோடு
நிசப்தமான பொழுதினிலே
நித்திரையின்றித் தவித்தேன்
கண் விழித்துப் பார்த்தால்
மறுநாள் பொழுது...

## மழைத்துளி

இயற்கையின்
கொடையல்லவா நீ
கோடையில் வெய்யிலுக்காக
மறைந்திருந்த
புன்னகைப் பூவல்லவா நீ
உன் முகம் மறைத்திருந்த
மேக முகில்கள் விலகி
கார் முகில்கள் கருக் கொண்டு
உன் வருகையை எதிர் பார்த்து
காத்திருந்த போர் மேகங்கள்
இடி இடிக்க மின்னலென
ஒளிப் பிளம்புகள்
வான வேடிக்கை செய்து கூத்தாட
வலிகள் தந்த வேதனையில்
விழிகளின் இமையோரம்
துளித் துளியாய் ...
விழுந்த உயிர் துளியால்
இயற்கையின் வனப்புகள்
குளிர்ந்து சிலிர்த்து நின்றன.

## தற்கொலை

பூச் சூடும் நேரத்தில்
புன்னகைப் பூக்கள் ஆர்ப்பரிக்க
கட்டுக் கடங்காத ஆசைகள்
அலை மோதுகின்ற காலத்தில்
பேதைப் பருவத்து காரிகையே

போகும் இடம் எதுவென்று
சொல்லாமல் தற் துணிவினால்
தன்னைத் தானே
அழித்துக் கொள்ளும்
ஆயுதத்தால் காலமெல்லாம்
கலங்கவிட்டு ஓடிவிட்டாயே
பொட்டிருந்த நெற்றியுடன்
பூவிருந்த கூந்தலுடன்
மை நிறைந்த கண்களுடன்
எம்மை தவிக்கவிட்டு
மறைந்து விட்டாயே

ஈர்ஐந்து மாதங்கள் கருச் சுமந்து
பாசம் ஊட்டி வளர்த்த
அன்னையிவள் முகம்
நினைக்காமல் - வெறும்
கண்ணீர் துளிகளை
காணிக்கையாகத் தந்து விட்டு
போய் விட்டாயே
கைவளையல் மோதிரமும்
மஞ்சளோடு குங்குமமும்
காற்சலங்கை சங்கிலியும்
செய்து வைத்தேனே
உன் மணக்கோலம் காண்பதற்கு நீ
போகையிலே தந்தையிவன்
முகம் பார்க்காமல்
உன் நினைவுகளின் நியங்களைத்
எமக்கு தந்து விட்டு
போய் விட்டாயே
வலியின்றி வாழ்கையில்லை
துயர் கண்டு துவண்டு கொள்ளாமல்
எதிர் நீச்சல் போடு ஆனால்
போன உயிர் மீள வருமா ?

## பார்வையின் பதிவுகள்

உன் பார்வையொன்றின்
பதிவுகள் - என்
போர்வைக்குள்
சிறைப்பட்டனவே
உன் வீட்டு
வாசலில் தேடிப்பார்
என் பாதச் சுவடுகள்
உன் வரவுக்காய்
காத்துக் கிடக்கின்றன

என் நினைவுகள்
உன்னைச் சுற்றி
வருகின்றன நீயோ
நித்தமும் என்னை
கண்ணீரில் நனைய விட்டு
தனியாகப் போக
சந்தர்ப்பம் பார்க்கின்றாய்

## விண்மீன்கள்

அந்தி வானத்து கதிரோன்
ஆர்பரிக்கும் கடலையின்
தொலை தூரத்து தொலை வானில்
மறைந்து போக
இருண்ட இரவின் போர்வைக்குள்
இதமாக கடலன்னை உறங்க
வெள்ளி நிலா வெளிச்சத்தில்
வெண் நுரைப்பூக்கள் கரையில் பதிந்த
பாவங்களின் பாதங்களை
அர்ச்சித்துச் செல்ல
நள்ளிரவு வேளையில் நடுக்கடலில்
அலையின் இனிய கீதம்
இதமாக தாலாட்ட
விழி மூட மறுக்கின்ற
விடிகாலை வரை
உப்புக் காற்றின் உயிர் மூச்சில்
கட்டு மரத்தில் கைவலிக்க
வலை விரித்து
விண்மீன்கள் வரும் வரை
தினமும் காத்திருக்கின்றோம்.

## விளை நிலம்

எழுவான் கரையின்
ஒளி விழிகள்
தொலை தூரத்து
தொலை வானிலிருந்து
சுட்டெரிக்கும்
தீப் பிளம்பாய்
கக்கிய ஒளிக் கதிர்கள்
உச்சந் தலையில்
பட்டுத் தெறிக்க
புழுதி மண்ணிலே
உரமேறிப் போன
உயர்வான உழைப்பின்
வியர்வைத் துளிகளால்
சருகாய் கருகிய
பயிர்கள் துளிர்விடும்
விளை நிலமே.

## ஆசான்

ஆசான் என்ற மூன்றெழுத்து
இலக்கியத்திற்கு இலக்கணமாய்
சகல துறைகளின் விற்பன்னராய்
பைதகரசின் வழித் தோன்றலாய்
இலகு கற்பித்தல் உத்திகளோடு
அல்லும் பகலும் ஓய்வின்றி
கண்டிப்புடன் கல்விச் சிகரத்தில்
எமை ஏற்ற ஏணியாய் நின்று
அர்ப்பணிப்பான சேவை செய்த
கணிதத்தின் மேதையல்லவா நீங்கள்.!

உயர்தரத்திற்காக கணிதத்தில்
எம்மை நாம் இழந்து
நிர்க் கதியாய் நின்ற போது
எம் வாழ்வின் வசந்தத்திற்காக
ஊன்று கோலாய் நின்று
வழிகாட்டி ஒளியேற்றிய
கணிதச் சுடரல்லவா

இன்று வித்துக்கள் விருச்சமாகி
கிளை பரப்பி நிழல் விரித்து
விழுதூன்ற நீர் வார்த்த மேகமே
எம் கணித காருண்யனே

## மரணவாசல்

முன்பொரு நாளிலே
முழுநிலாப் பொழுதினிலே
மல்லிகை முற்றத்தில்
நிலாச் சோறுண்டு
மகிழ்ந்திருந்தோம்.

இன்னொரு நாளில்
இருண்ட இரவிற்குள்
இருப்புக் கொள்ளாத வாழ்வு
இடம் மாற தவியாய் தவித்து
உண்மைகள் ஊமையாக
கண்கள் ஈரமாக உறவுகளைப் பிரிந்து
நினைவுகளைச் சுமந்து
வாழ்வின் வசந்த வாசல் நோக்கி
தட்டுத் தடுமாறி நடந்தோம்
வந்தோரை வாழ வைக்கும்
மண்ணிலே சருகாய் கருகிய
வாழ்வு புத்துயிர் பெற்று

அந்த இறுதி நாள்
வாழ்கையில் ஓடு ஒடென
வல்லூறுகள்
முற்றுகை முற்றத்துக்குள்
விரட்டியது.
முக்காட்டில் முகாரி
இசைத்த முகங்களின்
மனங்களின் சிந்தனைகளிலே
மரணவாசலின் நினைவுகள்
வாழ்வா சாவா
என்ற புலம்பல்
உறங்கும் உயிர்களை
விழித்துக் கொள்ள வைத்தது.

## அன்னை

அன்னையே என் தெய்வமே
உன் நினைவு வாழ்கிறதே
எனக்குள் நீ வாழும் வரை
விழிகளின் ஓரமாய்
பாசத்தின் ஈரம் காயுதே
மறக்க முடியாமல்
நினைவைச் சுமக்கின்றேன்

அம்மா என்ற தாரகை மந்திரத்திற்கு
பொருள் சொல்லித் தந்தவளும் நீயே....
பத்து மாதங்கள் வலிகள் தந்த
வேதனையில் விழிகள் மூட
மறுக்கின்ற போதும்
பாசம் ஊட்டி வளர்த்தீரே
ஒரு நாள் எனைப் பிரிய
உனது மனம் நொந்து தவித்தீரே
உன் பாசத்தின் ஆழம்
சொல்லிட என்னிடம் வார்த்தைகள் இல்லை

பள்ளி சென்று நான் படிக்க
நன்னெறி காட்டித் தந்தீரே
வெள்ளி நிலாவில்
உணவு ஊட்டி வளர்த்தீரே
உன் கனவுகள் என் வாழ்வில்
நினைவாகும் வரை
என் நினைவிற்குள்
நியமாக வாழ்ந்திடுவாய் ....

## தொலைந்த காலங்கள்

உலகம் உள்ளங் கைக்குள்
இணைய உலாவியாக வலம் வர....
பள்ளியிலே பல காலமாய்
பின் வரிசைக்குரியவனாய்
குறும்புகள் செய்து
அற்ப சந்தோசத்திற்காக
சிரிப்பை வழங்கும் கோமாளியாய்
வலம் வந்தாய் இன்று
கையிலே தொலைபேசியுடன்
தெருவோரத்து காட்சிப் பொருளாக
அல்லும் பகலும் சுவாரசியமாக
பொழுதைப் போக்கி
தொல்லை தரும் தொலைக்காட்சியிலே
மதி மயங்கி பல பேரின்
வாழ்கைக்கு நெருக்கீடுகளை
கொடுக்கும் தலைவனாக
வலம் வருகின்றாய்.....
உன்னை நீ உணராமல்
உனக்குள் மறைந்துள்ள
ஆற்றலின் ஆற்றாமையை அறியாமல்
காலநதியிலே காலத்தை
வீணாக்குவதேனோ...?

## பயணம்

வற்றிப் போகும்
வாலிப கனவுகள்
தொட்டுச் செல்லும்
பிஞ்சு ஞாபகங்கள்...
நெஞ்சு கனக்கும்
அந்த கனவு
அத்தனையும் சுமந்தபடி
இன்னமும் அவன்!

பட்டதும் குத்திச் சிணுங்கும்
தொட்டாவடிகளுடே
தொலை தூரம் நோக்கிய
அதிகாலைப் பயணம்
அந்த விடியலைத் தேடி
இன்னும் இவன்
இருட்டினில் பயணம்
நலமா...

## பட்டமரம்

எனக்கான
ஆறுதல் மொழியே !
உன் கண் அசைவுகளின்
அர்த்தம் கண்டு
காலமெல்லாம் வாழ
ஆசைப்பட்டேன்.

ஏன் நீ என் கனவுகளைக்
கலைத்து விட்டு
பாதியிலே திரும்பிப்
பார்க்கின்றாய்
நான் தனித்துப் போன
பட்டமரமாகி
காலமெல்லாம்
கண்ணீர் சிந்தட்டுமா

## ஏழைகளின் வயிறு

அங்கே ஒட்டிப் போன
வயிறுகள் ஒப்பாரி
வைக்கின்றன.
ஒரு நேர கஞ்சி கேட்டு
பாலபிஷேகம் செய்தால்
புண்ணியம் சேரும்
திண்ணிய மனசுகள்
பாலூற்றிப் போகின்றன
கடவுளின் காலடிக்கு...

கடவுள் கூட
கண்களை மூடியபடி
சிந்திக்கின்றார் - ஓ மனிதா
உன் மனதை மாற்று
எரிகின்ற ஏழைகளின்
வயிறுகளுக்கு ஊற்று
என் காலடி நனையும்.

## இதயத்துச் சூரியன்

உதய சூரியனின்
வருகைக்காய்
உறை பனி சிந்தும்
தைத்திங்களில்
நிறைபானை பொங்கிச்சரிய
அரிசியோடு சர்க்கரையும் -
பிறவும் கலந்து ஒரு சந்திப்பு
இதயத்துச் சூரியனின்
வருகைக்காய்
அனு தினமும் விளக்கேற்றி
மனதோடு அழுகின்றோம்
செய்திகள் பொய்யாகி
மனசுக்குள் மத்தாப்பாய்
அவன் வருகை நோக்கி
அந்தக் கடலோரம்
மேய்கின்றோம்
கண்களால் தினமும்....

## வலிகளின் புலம்பல்

இது வார்த்தைகள் அல்ல
என் வலிகளின் புலம்பல்கள்
வலிகள் போதும் - இனி
வலிகளைப் பொறுப்பதை விட
இறப்பதே மேல்..
ஆறுதல் தேட யாருமில்லை
அரவணைக்க உறவுகளின்றி
வீதியோரத்தில் வயிற்றுப் பசிக்காக
வறுமையின் வரிகளை
உடலில் தாங்கி
நிற்கின்றேன்

மரணத்திலாவது
யாவரும் சந்திக்கலாமல்லவா
ஆதலால் மரணத்தை
விரும்புகின்றேன்
என்னை மன்னித்துவிடு.

## சோலைப் பூக்கள்

என்னருகில் நீ
இருக்கையில் வானத்து
நிலவு கூட என்
மடியில் தவழும்.... தூர நீ
விலகினாலே
சொர்க்கம் கூட கசக்கிறது.
உன்னோடு
பேசுவதைக் காட்டிலும்
உன்னை ரசிப்பதுவே
சுவை அதிகம் - ஏனெனில்
சுவையூற்றாய் - உன்
சேலை மூடிய
சோலைப் பூக்கள்
தேனைச் சிந்துவதனால்

## மின்சாரப் பெட்டி

உழைத்து களைத்து
நாடி நரம்புகள்
உப்பிப் பெருக்க
தேடி வைத்த சொத்துக்கள்
நாடி வந்த உறவுகளால்
நாசுக்காய் தினமும்
கரைக்கின்றன. தண்ணிராய்!
வெறியாட்டம் ஆடி

குருணி மணிகளைக்
கூட்டியள்ளி - கூடையிலே
சேர்த்து வைத்து
கூழ் காய்ச்சி குடிப்பதற்குள்
பானையிலே ஓட்டை..
யார் தான் காரணமோ

கழுத்திலே மின்னிய
நகையெல்லாம்
மின்சாரப் பெட்டிக்குள்
அடைவு இதை எண்ணி மனித மனம்
கண்ணயர்ந்து சிரிக்கின்றன.

## நினைந்தும் நினையாமல்

எனக்கான மொழியே
உன்னோடு பழகிய நிமிடங்கள்
உயிரோடு வாழ்ந்ததாக
ஒரு ஞாபகம்
என் வாழ்கை அர்த்தப்பட்ட
அந்த நிமிடங்களின்
காத்திருப்புக்கள் சுகமே

சின்னச் சின்ன பயணங்களில்
என் தோள் படரும் உன் கூந்தல்
உன்னைப் போல
பட்டாலும் ஒட்டிக்கொள்ளாமல்
ஒதுங்கிக் கொள்வதேனோ

எல்லைகள் தாண்டாத
உன் தொல்லைகள் கூட

எனக்கான மொழியே
உன்னோடு பழகிய நிமிடங்கள்
உயிரோடு வாழ்ந்ததாக
ஒரு ஞாபகம்
என் வாழ்கை அர்த்தப்பட்ட
அந்த நிமிடங்களின்
காத்திருப்புக்கள் சுகமே

சின்னச் சின்ன பயணங்களில்
என் தோள் படரும் உன் கூந்தல்
உன்னைப் போல
பட்டாலும் ஒட்டிக்கொள்ளாமல்
ஒதுங்கிக் கொள்வதேனோ

எல்லைகள் தாண்டாத
உன் தொல்லைகள் கூட
இன்னும் இனிக்கின்றன
உன் மொழியைப் போல
உன் மௌனம் கலைத்து
பொய்க் கோப முகத்திரை விலக்கி
என்னோடு சம்பாசிக்க
ஒரு தேதி குறிப்பாயா

மழைக்காக குடை தந்து
என் மனதை வேதனைகளால்
நனைந்து சுமக்க
விரும்புகின்றாயா

பேசிப் பழகிய இடமெல்லாம்
தூசி படிந்து உன் வரவுக்காக
காத்திருக்க பாரா முகமாக
எதையோ வெறித்தபடி

## உறங்கும் பிணங்கள்

ஓ மனிதா....
போகும் இடமெங்கும்
காற்றிடை வெளியே
உறங்கும் பிணங்களின்
வாடைகள் ஆங்காங்கே
ஒற்றை வரம் போரம்
ஓநாய்களின் கதறல்களும்
மரண ஓலங்களும்
வானைத் தொட்டன
ஒரு பிடி சாம்பல் கூட
அள்ள முடியா
மஞ்சள் ஆற்றுத் திடலில்
புதைக்காமல்
விதைக்கப்பட்ட
உடலங்களின் பொத்தல் வழியே
பாய்ந்த குருதியாற்றால்
மண் மாதா சிந்திய
கண்ணீர் துளிகளினால்
உயிரற்ற உடலங்கள்
உறைந்து விறைத்துக் கொண்டன.

## கருவறை

என் கருவறையில் மென்மையான
உயிர் பூவாய் நீயிருந்த போதிலும்
மிருதுவான இதழ்களின் பாதமென்
நெஞ்சு நிறைந்த நினைவுகளாய்
நெஞ்சைக் கிளறுகின்றன.

என் குருதிக் கொடியில்
உயிர் பெற்ற உதிரப் பூவே
உயிரொழுகி உதிர்த்த
என் வயிற்றில் - உன்
உயிர் உணரச் செய்தாயே
நீ உயிர் பெறும் - என்
உயிர் போகும் வலி மறைய
அழ முடியாத மனவெளியிலே
நானடைந்த ஆனந்த
துயர் யாரறிவார்

நான் வடித்த சிற்றன்னவாசல் சிலையழகே
மார்போடு உனையணைத்த மென்னுணர்வும்
தோளோடு துயில்கின்ற நினைவுகளும்
நெஞ்சிருக்கும் வரை
என்னுள் சிலிர்க்கின்றன.

## பொய் முகங்கள்

அந்தரத்தில் விழுதெறிந்த
உறவுகளின் வாழ்வு
எங்கோ.....
தொலை தூரம் தொலைந்து போனதுவே
சின்னச் சின்ன கூடு கட்டி
கொஞ்சிக் குலாவி
கொழுந்து கிள்ளி
கொஞ்சம் கொஞ்சமாக
சேர்த்து வைத்த
வாழ்வின் தடங்களில்
இடியென மண் மாரி மழை....
பொழிந்தனவே.
திக்கு திசை தெரியாமல்
உடல் பாதி உருமாறி
அசைவின்றிய சிலைகளாக
உருக்குழைந்து
சேற்று மண்ணுக்குள்
மூச்சு முட்டி இறுகி நின்றன
உருவம் தெரியாத
பொய் முகங்களாக..

## உயிர்க் குருவி

இருள் சூழ்ந்த
எம் நிலையில்லா வாழ்வில்
வெளிச்ச விழிகள் திறக்க
குருதியாற்றில் நீந்தினாய்
சுடர் விட்டெரியும்
நெருப்பின் நாக்காய்
வீணர்கள் ஏவிய தீ பிளம்பு
உன்னுடலில் விதைத்த
முளைகளாக தழும்புகள்
நீ ஆடிய ஆட்டத்தில்
உயிர் உருவும் அம்பு
உள்ளார்ந்தமாய் ஊடுருவி
உயிர் குருவி பறந்தது.
உல்லாச வானில்
சிறகடிக்கும் குருவியில்
இறகொடிந்த சிறகாய்
உன் உயிர் குருவி துளிர்த்தது.

## வளமான வாழ்வு

வளங்கள் நிரலித்த
இணையில்லா தேசமதில்
பதிந்த பாதங்களின்
சுவடுகளை முத்தமிடும்
சந்தங்கள் எம் பாதை புகட்டின.

இந்நிலையறிந்து நினைவிழந்து
நிம்மதியின்றி தலையிலடித்து
நெஞ்சிலறைந்து ஓவென்று
அலறி அழாதே

அணையாத சுடர் விளக்காய்
வாழ்வதற்கு இயற்கையான
கண்ணீர் துளிகளை காணிக்கையாக்கு
வளமான வாழ்வுக்கு.

## நிழலாடும் நினைவுகள்

மறைந்து போனவர் வரிசையிலே
நீள நிமிர்ந்த துயரங்கள் பல
ஆண்டுகளாயிரம் போயினும்
இலட்சிய வாழ்வு சாய்ந்திடுமோ

உன் குருதியில் உறைந்து போன
அன்னை மடி தாங்கிடுமே
உன் பாதங்கள் பதிந்த சுவடுகளில்
இனிமையான
சரித்திரம் உறைந்துள்ளதே

மலரும் மலர்கள் யாவும்
உன் வரவை நாடுதே
புலரும் காலையில்
வீசும் தென்றலும்

## நிழல் வாழ்வின் நிஜம்

வனாந்தர இரவுகளில்
நிலவு தூங்க
உதிரும் மலர்களின்
இதழ்களினால்
நினைவுகள் கலைய
நெருக்கமான நெருடல்களிடையே
தென்றல் காற்று
தொட்டுத் தொட்டு விலக
மனவெளிகளிடையே
படடாம் பூச்சி
விட்டுவிட்டு துடிக்க
விடியும் பொழுதினில்
நிழல் வாழ்வின்
நிஜம் நோக்கி
விரையும் போது
இடைவெளிகளற்ற
வெற்றிடம் என்றும் வெறுமையல்ல

## உயிரற்ற உறவு

இருண்ட இரவின்
உதிர்ந்த இதழின்
இரகசிய சாட்சியங்களாக
உயிரற்ற ஓர் உருவம்
நிழலாய் தொடர்கிறது.........

உயிர் கொண்ட வாழ்வின்
நெடுந்தூர பயணத்தில்
கடந்தகால ஞாபகங்கள்
நிகழ்கால நினைவுகளாய்
வாழும் வாழ்கையில்
தொடர்கிறது....

வான வெளியில்
ஒன்றோடு ஒன்றாய்
உறவாடிய மதி நிலவை
மேக முகில்கள்

துகில் உரித்துப் போன
மரண வலியில்
உதிர்ந்த நட்சத்திரங்கள்
கண்ணீராய் மழையைச்
சொரிகின்றன.....

மரணித்து விட்ட
பெறுமதி மிக்க உயிரை
வெறுமதியாய் கொன்றழித்த
இந்த மாய உலகின்
மதி கெட்ட வாழ்க்கையில்
சுடர்விடும் சோகங்கள்
எத்தனை எத்தனை .......
சோதனையில் சோர்ந்து
விழுகின்ற வேதனை நிறைந்த
நிமிடத்தில்......
ஆறுதல் சொல்கிறது
உயிரற்ற ஓர் உறவு.



பாக்கியநாதனின் படைப்புக்கள் அப்பட்டமான தன்மையுடன் வெளிவருகின்றன. வெளிப்படையாகத் தன் அனுபவங்களைச் சமர்ப்பிக்கும் பண்புடையவையாகின்றன. உறவின் பரிவுகள், உறவின் தியாகங்கள், போரின் கொடுந்தடங்கள், ஒழுக்க வாழ்வின் உன்னதங்கள், காதல் உணர்வுகள், நட்பின் வசீகரங்கள், குழந்தைகளின் ஏக்கங்கள், கல்வியின் சிறப்பு, ஆசிரியத்தின் மேன்மை என்று பல்வேறு விடயங்களை முன்வைக்கிறார்.

ISBN 978-955-3982-00-1

ஆகாயம் பதிப்பகம், இமையாணன், 0770898554.